# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590


**ஆணை நாள்.11.06.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9338/B/2020**

திரு. சு. ஆனந்தன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
நீர்வளத் துறை,
ஆரணியாறு வடிநில கோட்டம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

பொது அதிகார அமைப்பு

பொது தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
நீர்வளத் துறை,
அடையாறு வடிநில உபகோட்டம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

பொது தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
நீர்வளத் துறை,
கொசஸ்தலையாறு வடிநில கோட்டம்,
திருவள்ளூர் - 602 001.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 11.09.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து 18.12.2025 அன்று நடத்தப்பட்ட விசாரணைக்கு பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.வே.ஞானப்பிரகாஷ், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருவொற்றியூர் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் திருமதி.மஞ்சுளா, உதவி

செயற்பொறியாளர், மண்டலம்-I, திருவொற்றியூர், சென்னை ஆகியோர் ஆஜராகி ந.க.எண்.தஅஉச/302/2025/அ1, நாள்.16.12.2025 தேதியிட்ட அறிக்கையினை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தனர்.

2. மேற்கண்ட அறிக்கையில், மனுதாரர் திரு.S.ஆனந்தன் என்பவர் திருவொற்றியூர் வட்டம், சாத்தாங்காடு கிராமம், சாத்தாங்காடு ஏரியில் ஆக்கிரமிப்பு தொடர்பாக கடந்த 28.03.2025 அன்று, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் உலக தண்ணீர் தின கூட்டத்தில் சாத்தாங்காடு ஏரியானது கீழ்கண்ட புல எண்களில் (புல எண்.1, 25, 26, 27, 28, 29, 30/3, 31, 32/2) அமையப்பெற்று சுமார் 135 ஏக்கர் உள்ளது என தெரிவித்ததாகவும், ஆனால் அது தற்சமயம் பல ஆக்கிரமிப்புகளினால் 70 ஏக்கர் பரப்பு மட்டுமே உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்நேர்வில் மனுதாரர் திரு.S.ஆனந்தன் என்பவரின் புகாரின்படி மேற்கண்ட சாத்தாங்காடு ஏரியின் ஆக்கிரமிப்பு தொடர்பாக ஆணையத்தால் விரிவான அறிக்கை சமர்ப்பித்திட ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி திருவொற்றியூர் வட்டாட்சியர் அவர்களின் தலைமையில் வட்ட சார் ஆய்வாளர், நில அளவர், மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் கூட்டு புலத்தணிக்கையில் ஈடுபட்டனர். அதில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகிறது:-

| வ.எண். | ஆக்கிரமிப்பின் தன்மை | உரிமையாளர் விவரம் | பரப்பு | ஆக்கிரமிப்பு காலம் |
|---|---|---|---|---|
| 1. | **பால்மர் லாலி சர்வீஸ்** | மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனம் | சுமார் 10 ஏக்கர் | சுமார் 20 வருடங்கள் |
| 2. | **பால்மர் லாஜிஸ்டிக்ஸ்** | மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனம் | சுமார் 10 ஏக்கர் | சுமார் 20 வருடங்கள் |
| 3. | **கோத்தாரி கெமிக்கல்ஸ் நிறுவனம்** | தனியார் நிறுவனம் | சுமார் 10 ஏக்கர் | சுமார் 15 வருடங்கள் |
| 4. | **மணலி பெட்ரோலியம் லிமிடெட்** | தனியார் நிறுவனம் | சுமார் 10 ஏக்கர் | சுமார் 15 வருடங்கள் |
| 5. | **Sea tex** | தனியார் நிறுவனம் | சுமார் 10 ஏக்கர் | சுமார் 15 வருடங்கள் |
| 6. | **எம்.ஜி.ஆர் என பெயரிடப்பட்ட சுமார் 200 குடும்பங்கள் கொண்ட குடியிருப்பு பகுதி** | மேற்கண்ட தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் மற்றும் உள்ளூர் வாசிகள் | சுமார் 10 ஏக்கர் | சுமார் 10 முதல் 20 வருடங்கள் |
| 7. | **விநாயகர் கோயில்** | வழிப்பாட்டு தலம் | 1200 சதுரடி | சுமார் 10 வருடங்கள் |
| 8. | **அரசின் பொது கழிப்பிடம்** | தமிழக அரசு | 600 சதுரடி | சுமார் 8 வருடங்கள் |

3. எனவே மேற்கண்ட அறிக்கையினை பரிசீலித்து, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

- மேற்கண்ட அறிக்கை மற்றும் விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆணையம் கவனமாக பரிசீலனை செய்தது. சாத்தாங்காடு ஏரியின் பெரும்பகுதி பல ஆண்டுகளாக ஆக்கிரமிக்கப்பட்டு, நீர்நிலையின்

இயல்பான பரப்பளவு கணிசமாக குறைக்கப்பட்டிருப்பது ஆணையத்தின் கவனத்திற்கு வந்துள்ளது. இது பொதுச் சொத்து மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான மிகக் கடுமையான பிரச்சினையாக கருதப்படுகிறது.

- நீர்நிலைகளை பாதுகாப்பது என்பது அரசாங்கத்தின் கடமையாக மட்டுமல்லாமல், பொதுமக்களின் கூட்டுப்பொறுப்பாகவும் விளங்குகிறது. இருப்பினும், நீண்டகாலமாக நிலவி வரும் இவ்வாறான ஆக்கிரமிப்புகள் தொடர்பாக உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படாதது வருத்தமளிக்கிறது.

- எனவே, **திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள்** இவ்விவகாரத்தை மிகுந்த முக்கியத்துவத்துடன் எடுத்துக்கொண்டு, சாத்தாங்காடு ஏரியில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் சட்டப்படி ஆய்வு செய்து, தகுந்த மற்றும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகின்றது. மேலும், ஏரியின் முழு பரப்பளவை மீட்டெடுத்து பாதுகாப்பதற்கான காலக்கெடுவுடனான செயல் திட்டம் தயாரித்து செயல்படுத்தப்பட வேண்டும்.

- இவ்விவகாரத்தின் முன்னேற்றத்தை **செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்கள்** நேரடியாக கண்காணித்து, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கைகளின் நிலை, ஏரி பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால தடுப்பு ஏற்பாடுகள் குறித்த விரிவான நிலை **அறிக்கையை ஆணையத்திற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பொது தகவல் அலுவலர் மூலமாக 30.07.2026 அன்று நேரில் ஆஜராகி தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.**

- **தவறும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பின்மை குறித்து ஆணையம் மேலும் உரிய நடவடிக்கைகளை பரிசீலிக்கும்.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண். SA 9338/B/2020**

## பெறுநர்

1. அரசுச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை -9.

2. அரசுச் செயலாளர்,
நீர்வள ஆதாரத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை -9.

3. பொது தகவல் அலுவலர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை -9.

4. மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் - 602001.

5. பொது தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
நீர்வளத் துறை,
ஆரணியாறு வடிநில கோட்டம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

6. பொது தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
நீர்வளத் துறை,
அடையாறு வடிநில உபகோட்டம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

7. பொது தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
நீர்வளத் துறை,
கொசஸ்தலையாறு வடிநில கோட்டம்,
திருவள்ளூர் - 602 001.

8. வட்டாட்சியர்,
திருவொற்றியூர் வட்டம்,
சென்னை மாவட்டம்.

9. மண்டல அலுவலர்,
மண்டலம் I,
பெருநகர சென்னை மாநகராட்சி.

10. மேல்முறையீட்டாளர்,
திரு. சு. ஆனந்தன்,
எண்.1, 2-ஆவது தெரு,
புதிய எம்.ஜி,ஆர் நகர்,
மணலி,
சென்னை - 600 068.
செல்.9176475378.

Copy to: File. GP PC
110626.